**சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு புகையிலை கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு**

செ.வெ.எண்.31 **கருத்தரங்கு** நாள்:.09.01.2010

**பத்திரிக்கை செய்தி**

தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் கீழ் வரும் மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம் சார்பாக, உலக சுகாதார நிறுவனமும் தமிழ்நாடு தன்னார்வ நலக் குழுமமும் இணைந்து நடத்திய தமிழக சட்டபேரவை உறுப்பினர்களுக்கு புகையிலை கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு சென்னை, தலைமை செயலகத்தின் 10வது தளம் கருத்தரங்க கூட்டத்தில் மதியம் 3 மணி அளவில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பொது சுகாதார துறை இயக்குநர் மருத்துவர் எஸ்.இளங்கோ, அனைவரையும் வரவேற்று மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம் எடுத்துவரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

சுகாதாரத்துறை செயலர் திரு.வி.கே.சுப்புராஜ் அவர்கள் விளக்கவுரையில் புகையிலை பொருட்களின் பயன்பாடு வாழ்க்கைமுறை பழக்கவழக்கத்தால் ஏற்பட்டுள்ளது. இது கட்டுபடுத்தக்கூடியதுதான். இந்திய அரசின் புகையிலை பொருட்கள் தடுப்பு சட்டம் 2003ன் படி தமிழக அரசு இச்சட்டத்தினை அமுல்படுத்துவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உள்ளது. **தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தில் புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சிறந்த முறையில் நடைமுறை படுத்தியதற்காக தமிழக அரசு இந்திய அரசின் சிறந்த மாநில விருதினையும், சான்றிதழையும் 2009ம் ஆண்டு பெற்றுள்ளது.** பொது இடங்களில் புகையிலை பொருட்களை பயன்படுத்த தடை, புகையிலை பொருட்கள் குறித்த விளம்பரங்கள் நேரரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ செய்ய தடை, புகையிலை பொருட்களை 18 வயதுக்கு உட்பட்டவர்கள் வாங்கவோ, விற்கவோ தடை, கல்வி நிறுவனங்களின் 100 கெஜம் சுற்றளவில் புகையிலை பொருட்கள் விற்க தடை, புகையிலை பொருட்கள் மீது படத்துடன் கூடிய எச்சரிக்கை வெளியிடப்படவேண்டும் போன்ற சட்டங்கள் செம்மையாக நடைமுறைபடுத்தபட்டு வருகிறது. இது வரை தமிழ்நாட்டில் 15600 பேரிடம் ரூபாய் பதினேழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் (Rs.17,75000) பொது இடங்களில் புகை பிடித்ததற்கான அபராதம் விதிக்கப்ட்டுள்ளது.

எனவே மக்கள் பிரதிநிதிகளாகிய தாங்கள் இச்சட்டத்தினை தொகுதி மக்களுக்கு கொண்டு சென்று புகையிலை பழக்கத்தினை அறவே ஒழிக்க நடவடிக்கை எடுப்பதுடன், புகையிலையினால் மக்களுக்கு, அரசுக்கு, நாட்டுக்கு எற்படும் பாதிப்புகளை அனைத்துதரப்பு மக்களிடம் கொண்டு சென்று இந்த ஆட்கொல்லி பழக்கத்திலிருந்நாது விடுவிக்க வேண்டுமென சுகாதாரத்துறையின் சார்பாக கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தங்கள் சிறப்புரையில் தமிழகத்தை செம்மையாக வழிநடத்தி நல்லாட்சி தரும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றதாகவும் தலைமை ஏற்று நடத்திதரும் மாண்பு மிகு சட்டபேரவை சபாநாயகர் அவர்களுக்கும் சட்டபேரவை மற்றம் தமிழக அரசின் உயர் அலுவலர்களுக்கும் சட்டபேரவையின் மக்கள் பிரதிநிதிகளான அனைத்து உறுப்பினர்களுக்கும் சுகாதாரதுறையின் செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ் அவர்களுக்கும், பொது சுகாதாரதுறையின் இயக்குநர் மருத்துவர் எஸ்.இளங்கோ, அவர்களுக்கும், உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர், தன்னார்வ நல குழுமம் அலுவலர்களுக்கும், சுகாதார துறையை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும், மாநில புகையிலை கட்டுப்பாட்டு மைய அலுவலர்களுக்கும், பத்திரிக்கை தொலைக்காட்சி நண்பர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார். புகையிலை பொருட்கள் பயன்பாட்டில் காசநோய், வாயில் புற்றுநோய், இதயநோய், மாரடைப்பு, நுரையீரல், புற்றுநோய், மலட்டுதன்மை, ஆகியவை ஏற்படுகிறது.

இந்தியாவில் வருடத்துக்கு 10 இலட்சம் மக்கள் புகையிலை பொருட்களினால் இறக்கிறார்கள். புகையிலை பயன்படுத்தும் ஆண்கள் 56% பெண்கள் 15%
இதில் 89% 18 வயதுக்கு உட்பட்டவர்கள் புகைபிடிப்பவர்கள் சுமார் 22 முதல் 24 ஆண்டுகள் வரை வாழ்நாளை இழக்கிறார்கள்.

புகைப்பிடிப்பதனால் பெண்கள் மற்றும் குழந்தைகள் அதிகமாக பாதிக்கபடுகின்றனர். ஆகவே தான் தமிழ்நாடு அரசு சுகாதாரத்துறை பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1. புகையிலை தடுப்பு சட்டங்கள் அமலாக்கத்தை கண்காணித்தல்
2. தகவல் கல்வி தொடர்பு
3. பள்ளி கல்வி திட்டத்தில் புகையிலை விழிப்புணர்வு
4. புகையிலை விழிப்புணர்வு பயிற்சி
5. புகையிலை தடுப்பு ஆலோசனை மைய சேவை.

இங்கே சொல்லப்படும் தகவல்களை அனைத்து தொகுதி மக்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை உள்ளது. அதோடு இதனை செமுமையாக செயல்படுத்தி புகையிலை பொருட்கள் பயன்பாடு இல்லாத மாநிலமாக தமிழகம் உருவாக ஒத்துழைப்பை கேட்டுக் கொண்டார்.

இந்த சிறப்பான கருத்தரங்கை மாண்புமிகு சட்டப்பேரவை சபாநாயகர் திரு.இரா.ஆவுடையப்பன், தலைமை ஏற்று இந்த புகையிலை குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கில் தெரிவிக்கப்படும் அனைத்து தகவல்களையும் அந்தந்த தொகுதி மக்களுக்கு எடுத்துச் சென்று பொது மக்கள் பயன்படும் வகையில் செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டும், புகையிலைனால் ஏற்படும் கேடுகளை குறிப்பாக பெண்கள், குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அதன் சட்டத்தினை தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் நடைமுறை படுத்த சட்டபேரவை உறுப்பினர்களை கேட்டுக் கொண்டும் இந்த சிறப்பு மிக்க பயனுள்ள கருத்தரங்கினை நடத்த ஆவண செய்த அனைவருக்கும் நன்றி கூறி இந்த கருத்தரங்கு வெற்றிகரமாக அமைந்திடவும் வாழ்த்தினார்.

இந்த கருத்தரங்கம் மற்றும் புகையிலை விழிப்புணர்வு குறித்த கருத்துக்களை சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு. இ.எஸ்..எஸ்.ராமன் மற்றும் திரு எஸ்.லட்சுமணன் எடுத்துரைத்தார்கள். இறுதியாக தன்னார்வநல குழுமம் செயல் இயக்குநர் திருமதி.செளலினா அர்னால்டு நன்றியுரையாற்றினார்.

இந்த கருத்தரங்கில் பெரும்பாலான சட்டப்பேரவை உறுப்பினர்கள் பல்வேறு துறையைச்சார்ந்த உயர் அதிகாரிகள், சுகாதாரத்துறை அலுவலர்கள், மாநில புகையிலை கட்டுப்பாட்டு மைய அலுவலர்கள், தன்னார்வநல குழுமத்தைசார்ந்தவர்கள், பத்திரிக்கை, தொலைக்காட்சி நிருபர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அவர் ஆற்ற வேண்டிய கடமைகள், புகையிலை குறித்த விழிப்புணர்வு மற்றும் சட்ட சம்மந்தப்பட்ட கையேடு, புகையிலை தடுப்பு மைய சாதனைகள் அடங்கிய புத்தகம் சுகாதாரத்துறையின் சார்பாக வழங்கப்பட்டது.

இயக்குநருக்காக பொது சுகாதாரம் மற்றும்
நோய்த்தடுப்பு மருந்துத்துறை

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9